## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் கனடா - கல்கேரியில் உள்ள பைத்துந் நூர் பள்ளிவாயிலில் 04.07.2008 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஸஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸுர் அவர்கள் இவ்வாறு கூறினார்கள் :**

ஜமாஅத்தே அஹ்மதிய்யா கனடாவிற்கு இன்னொரு புதிய பள்ளிவாசலைக் கட்டுவதற்கான தவ்ஃபீக் கிடைத்துள்ளது. அல்ஹம்துலில்லாஹ். தொழுகைகள் மூலம் இதன் துவக்கம் நிகழ்ந்து விட்டாலும் எனது இந்த குத்பாவின் மூலம் இதற்கான அறிவிப்பை நான் செய்கின்றேன். கல்கேரியில் ஒரு நீண்ட காலமாக பள்ளிவாசலுக்கான தேவை உணரப்பட்டு வந்தது. ஆனால், அல்லாஹ்வின் ஒவ்வொரு பணியிலும் ஹிக்மத் இருக்கும். சில வருடங்களுக்கு முன்னால் இந்த பள்ளிவாசல் கட்டப்பட்டிருந்தால் இவ்வளவு அழகான பள்ளிவாசல் கட்டப்பட்டிருக்க முடியாது. நேற்று நான் விமான நிலையத்தை வந்தடைந்த போது என்னை வரவேற்பதற்காக இந்த நகரத்தின் மேயரும் மாநில சட்டசபை உறுப்பினர்கள் சிலரும் அங்கு வந்திருந்தார்கள். அவர்களிடம் பேசிக் கொண்டிருந்தபோது இந்த பள்ளிவாசல் அல்லாஹ்வின் அருளால் உங்கள் நகரத்திற்கு மேலும் அழகை அதிகரிக்கக் கூடியதாக இருக்கும் என்று நான் கூறினேன். எல்லாருமே இந்த பள்ளிவாசலின் அழகைப் பாராட்டி தங்கள் கருத்துக்களைத் தெரிவித்தார்கள். மேலும் பல்வேறு தெருக்களிலிருந்து பார்த்தாலும் இந்த பள்ளிவாசலின் அழகிய தோற்றம் தென்படுவதாக அவர்கள் என்னிடம் கூறினார்கள். அப்போது நான் இந்த பள்ளிவாசலைப் பார்க்கவில்லை. பிறகு விமான நிலையத்திலிருந்து இங்கு வரும் வழியில் மிக தொலைவிலேயே இந்த பள்ளிவாசலின் மினாராவும் அதன் கலசமும் எனக்கு தென்பட்டது. நாம் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துபவர்களாக இருக்க வேண்டும். அவன் இந்த பகுதியில் ஜமாஅத்தே அஹ்மதிய்யா கனடாவிற்கு ஒரு அழகிய பள்ளிவாசலைக் கட்டுவதற்கான நற்பாக்கியத்தை வழங்கியுள்ளான். இந்த பள்ளிவாசல் ஏறக்குறைய 15 மில்லியன் டாலர் செலவு செய்து கட்டப்பட்டுள்ளது. இதற்காக மிகச் சிறந்த இடமும் நமக்கு கிடைத்தது. இதன் பரப்பளவு 4 ஏக்கர் ஆகும். முழு உலகிலுள்ளவர்களும் குத்பாவை கேட்டுக் கொண்டிருப்பதால் இந்த விபரங்களை நான் கூறுகின்றேன். இங்குள்ள ஜமாஅத் செய்ய ஆரம்பித்த மிகப்பெரிய Project ஆக இது இருக்கின்றது. இங்கிருந்து பெரும்பாலான ஜமாஅத் சகோதரர்களின் கடிதம் எனக்கு வந்து கொண்டிருந்தது. இப்போதும் கடிதங்கள் வந்து கொண்டிருக்கின்றன. நாங்கள் பள்ளிவாசல் கட்டுவதற்காக இவ்வளவு தொகை தருவதாக வாக்களித்துள்ளோம். வெளிப்படையாகப் பார்க்கும் போது இந்த வாக்குறுதி நிறைவேறும் வகையிலுள்ள நிலைமை இங்கு இல்லை. நாங்கள் செய்த வாக்குறுதியை நிறைவேற்றுவதற்காக நீங்கள் துஆ செய்யுங்கள் என்று அவர்கள் தமது கடிதங்களில் எழுதியிருந்தார்கள். அல்லாஹ்வின் அருளால் இந்த ஜமாஅத் பெரும் தியாகத்தைச் செய்திருக்கின்றது. அல்லாஹ் இதற்காக பொருள் தியாகம் செய்த இவர்கள் அனைவருக்கும் இதற்கான சிறந்த நற்கூலியை வழங்குவானாக. எவர்கள் இதற்காக வாக்குறுதிகள் செய்த நிலையில் இங்குள்ள தவிர்க்க முடியாத நிலைமைகள் காரணமாக உடனடியாக தாங்கள் தொகையை முழுமையாகக் கொடுக்க முடியாத நிலையில் இருக்கின்றார்களோ அவர்களது உள்ளத்திலும் ஒரு அமைதியற்ற நிலை உருவாகி இருக்கின்றது. அல்லாஹ் அவர்களுக்கும் தங்களது வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கான நற்பாக்கியத்தை வழங்குவானாக! அல்லாஹ் இவர்கள் அனைவரது உயிர்களிலும் செல்வங்களிலும் அருள் செய்வானாக! இந்த பள்ளிவாசலுக்கு ஒரு Main Hall இருக்கின்றது. இது 10 ஆயிரத்து 400 சதுர அடியைக் கொண்டதாகும். இதை தவிர ஒரு Multipurpose Hall -ம் இருக்கின்றது. இது 7 ஆயிரத்து 200 சதுர அடியைக் கொண்டதாகும். 1800 சதுர அடியைக் கொண்ட Dining Hall -ம் இருக்கின்றது. மக்கள் தங்குவதற்கான இடம் இருக்கின்றது. ஜமாஅத்தின் அலுவலகங்களும், கிளை அமைப்புகளின் அலுவலகங்களும் கட்டப்பட்டுள்ளது. இவ்வகையில் மிகச் சிறந்த பெரிய Complex ஆக இந்த அழகிய பள்ளிவாசலின் தோற்றம் அமைந்திருக்கின்றது. எவ்வாறிருப்பினும், தற்போதைய ஜமாஅத்தின் தேவைக்கு இது போதுமானதாகும். அல்லாஹ் நமது தேவைகளையும் அதிகரிக்கச் செய்வானாக! அந்த

தேவைகளை நிறைவேற்ற மேலும் அவனது வழியில் வழங்குவதற்கும் மேலும் பள்ளிவாசல்களை கட்டுவதற்கான நற்பாக்கியத்தையும் நாம் பெற்றுக் கொண்டே இருப்போமாக!

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் பள்ளிவாசலை அல்லது பள்ளிவாசல்களை ஜமாஅத் பரவுவதற்கான ஒரு வழியாகக் குறிப்பிட்டுக் கூறியுள்ளார்கள். இந்த பள்ளிவாசலையும் இதே நோக்கத்தை நிறைவேற்றக்கூடியதாக அல்லாஹ் ஆக்குவானாக. ஒரு பள்ளிவாசலிலிருந்து இன்னொரு பள்ளிவாசல் என தொடர்ந்து பல பள்ளிவாசல்களை உருவாக்கும் நல்வாய்ப்பு இவர்களுக்கு கிடைக்கட்டும்.

பள்ளிவாசல்கள் கட்டுவதன் பக்கம கவனமூட்டியவாறு **ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள்** இவ்வாறு கூறுகின்றார்கள்:

இப்போது நமது ஜமாஅத்திற்கு பள்ளிவாசல்களின் தேவை அதிகமாக இருக்கின்றது. இவை இறைவனின் வீடுகளாக உள்ளன. எந்த கிராமத்தில் அல்லது எந்த நகரத்தில் நமது ஜமாஅத்தின் பள்ளிவாசல்கள் கட்டப்படுமோ அங்கு ஜமாஅத்தின் முன்னேற்றத்திற்கான அடித்தளம் நாட்டப்பட்டு விட்டது என்பதை நீங்கள் புரிந்து கொள்ளுங்கள். முஸ்லிம்கள் குறைவாக இருக்கின்ற ஏதாவது கிராமம் அல்லது நகரம் இருந்தால் அல்லது முஸ்லிம்களே இல்லாத பகுதியாக அவை இருந்தாலும் அங்கு இஸ்லாம் முன்னேற்றம் அடையவேண்டுமென்றால் அங்கு ஒரு பள்ளிவாசலைக் கட்ட வேண்டும். பிறகு அந்த இடத்தில் இறைவன் தானாகவே முஸ்லிம்களை ஈர்த்துக் கொண்டு வருவான். ஆனால் நிபந்தனை என்னவென்றால், பள்ளிவாசலை நிறுவுவதற்கான நிய்யத் (நல்லெண்ணம்) தூய்மையானதாக இருக்க வேண்டும். அல்லாஹ்வுக்காக மட்டும் அந்த செயல் இருக்க வேண்டும். அதில் மனதின் சொந்த நோக்கங்களை நிறைவேற்றுவதும் அவ்வகையிலான தீமையும் நுழைந்து விடக் கூடாது. அப்போதுதான் அல்லாஹ் அருள்களை வழங்குவான்.

**தொடர்ந்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

சுருக்கமாக, ஜமாஅத்திற்கென்று ஒரு பள்ளிவாசல் இருக்க வேண்டும். அப்பள்ளிவாசலில் நமது ஜமாஅத்தைச் சார்ந்த ஒருவர் இமாமாக இருக்க வேண்டும். அவர் மக்களுக்கு போதனைகளைக் கூற வேண்டும். ஜமாஅத்தைச் சார்ந்த அனைவரும் ஒன்றுசேர்ந்து இதே பள்ளிவாசலில் ஜமாஅத்தாக தொழுகைகளை நிறைவேற்றி வர வேண்டும். ஜமாஅத்தாக செயல்படுவதிலும் ஒற்றுமையிலும் மிகப்பெரும் அருள்கள் உள்ளன. தனித்தனியாக இருப்பதன் விளைவாக பிரிவினைகள் உருவாகும். ஒற்றுமையாக ஒரே அணியில் நின்று செயல்பட்டு அதில் பெரிய முன்னேற்றத்தை நாம் பெற வேண்டிய நேரம் இதுவேயாகும். சிறிய சிறிய தவறுகளை கண்டும் காணாமல் விட்டுவிட வேண்டும். ஏனென்றால், அவை பிரிவினைக்குக் காரணமாக இருக்கும்.

இந்த காலத்தில் இந்த மேற்கத்திய நாடுகளில் நமது பள்ளிவாசல்கள் மக்களை இஸ்லாத்தின் பக்கம் ஈர்ப்பதற்கான மிகப்பெரும் வழியாக இருக்கின்றது. இன்று இஸ்லாத்திற்கு எதிராக வலுவான திட்டமிட்ட தாக்குதல்கள் நடைபெறுகின்றபோது முஸ்லிம் அல்லாதவர்களின் கவனத்தை நமது பக்கம் ஈர்க்க வைப்பதற்கான வழியாக நமது பள்ளிவாசல்கள் இருக்கின்றன. அவ்வாறு இருக்கவும் வேண்டும். நீங்கள் செய்துள்ள இந்த தியாகங்களுக்குப் பின்னால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் குறிப்பிட்டுள்ள அந்த ஆன்மீக உணர்வுகள் உங்களிடம் இருக்க வேண்டும். அதாவது ஜமாஅத்தின் முன்னேற்றத்திற்கான அடித்தளத்தை நாம் அமைக்கின்றோம் என்ற எண்ணம் இருக்க வேண்டும். இதனால் முஸ்லிம்களின் கவனமும், முஸ்லிம் அல்லாதவர்களின் கவனமும் நம் பக்கம் இருக்க வேண்டும்.

எனவே, அல்லாஹ்வுக்காக நீங்கள் கட்டியுள்ள இந்த பள்ளிவாசலில் நிச்சயமாக உங்களது மனதின் சொந்த நோக்கங்களும், தீமையும் நுழையவில்லை. அவ்வாறு நுழையவும் முடியாது. ஏனென்றால், இந்த காலத்தில் இறைவனின் அடியாரை இறைவனுக்கு அருகில் கொண்டு செல்வதற்காக வந்துள்ள ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மைப் பேரன்பராகத் திகழ்கின்ற ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டவர்களாக நாம் இருக்கின்றோம். அவர்களோ ஒரு இறைவனின் அடியாருக்கு மற்ற அடியாரின்

மீதுள்ள உரிமைகளை எடுத்துக் கூற வந்துள்ளார்கள். எல்லா விதமான தீமைகளையும் அகற்றுவதற்காக அவர்கள் வந்துள்ளார்கள். தன்னை ஏற்றுக் கொண்டவர்களை தக்வாவின் நுட்பமான வழிகளில் வழிநடத்த அவர்கள் வந்துள்ளார்கள்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நமக்கு கவனமூட்டியவாறு ஓரிடத்தில் இவ்வாறு கூறுகின்றார்கள்:**

எவர்களது ஆடை சிறந்ததாக இருக்கின்றதோ, எவர்கள் செல்வந்தர்களாகவும் மகிழ்ச்சியில் திளைத்திருப்பவர்களாகவும் இருக்கின்றார்களோ அவர்கள்தான் இறைவனின் பார்வையில் அவனுக்கு மிகவும் விருப்பமானவர்களாக இருக்கின்றார்கள் என்று ஒருபோதும் நீங்கள் கருத வேண்டாம். மாறாக, உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்குபவர்கள்தான் இறைவனின் பார்வையில் அவனுக்கு மிகவும் பிரியமானவர்களாகத் திகழ்கின்றார்கள். அவர்கள் முழுக்க முழுக்க இறைவனுக்காகவே ஆகி விடுகின்றார்கள்.

இவ்வகையில் முழுக்க முழுக்க இறைவனுக்காகவே ஆகிவிடுபவர்கள்தான் பள்ளிவாசலுக்கான உரிமையையும் நிறைவேற்றுகின்றார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் செய்துள்ள பைஅத்திற்கான உரிமையையும் நிறைவேற்றுகின்றார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் குறிப்பிட்டதைப் போல நீங்கள் எல்லாரும் ஒன்றாக சேர்ந்து இந்த பள்ளிவாசலில் ஜமாஅத்தாக தொழுதால்தான் பள்ளிவாசலுக்குமுள்ள உரிமையை நிறைவேற்றியவர் களாக நீங்கள் ஆக முடியும். ஜமாஅத்தாக தொழுவதன் நோக்கம் இறைவனை வணங்குவதுடன் ஒற்றுமையாக செயல்படுவதில் முன்னேற்றம் ஏற்படுவதுமாகும். மேலும் சிறு சிறு தவறுகளை கண்டும் காணாமல் விட்டு விட வேண்டும். இவ்வாறு பள்ளிவாசல்கள் இறைவனுக்குரிய உரிமைகளையும் இறைவனின் அடியார்களுக்குரிய உரிமைகளையும் நிறைவேற்றக் கூடியவையாக இருக்க வேண்டும். இந்த நோக்கத்தை நிறைவேற்றாத பள்ளிவாசல் தொடர்பாக அவற்றிற்கு **மஸ்ஜிதே ஸரார்** (நாசம் விளைவிக்க நயவஞ்சகர்கள் நிறுவிய பள்ளி) என்ற பெயரை இறைவன் வைத்துள்ளான். (9:107) அவை நம்பிக்கையாளர்களின் உள்ளங்களை இணைப்பதற்குப் பகரமாக அவர்களுக்கு மத்தியில் பிரிவினைகளை ஏற்படுவதற்கான வழியாக ஆகி விட்டன. காலத்தின் இமாமை ஏற்றுக் கொள்ளாதவர்களின் பள்ளிவாசல்கள் இத்தகைய நிலையில் இருப்பதை நாம் பார்க்கின்றோம். அவர்களில் ஒருவர் மற்றவர் மீது குஃப்ர் ஃபத்வாக்களை வழங்கி வருகின்றனர். எங்காவது இவர்கள் ஒற்றுமையாக இருந்தாலும் அது அஹ்மதிய்யா ஜமாஅத்திறிகு எதிராக 'அஹ்மதிகள் காஃபிர்கள்' என்று ஃபத்வா கூறுவதில் தான் இவர்கள் ஒன்றாக நிற்கின்றார்கள். இவர்களது உள்ளங்களிலிருந்து வெறுப்பின் நெருப்பே கொளுந்து விட்டு எரிகின்றது. ஜமாஅத்தைச் சாராத பலரும் இதுபற்றி பல சந்தர்ப்பங்களில் வெளிப்படையாக தமது கருத்துக்களைக் கூறியுள்ளார்கள். உங்களது பள்ளிவாசல்களிலிருந்து தரப்படும் அமைதி மற்றும் அன்பின் தூதுச் செய்தியிலிருந்தும் எங்கள் பள்ளிவாசல்கள் காலியாக உள்ளன என்று அவர்கள் கூறியுள்ளார்கள். இவ்வாறான நிலை ஏன் உள்ளது? இதைப் பற்றியும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பு இருக்கின்றது. இன்றிலிருந்து 1400 வருடங்களுக்கு முன்னதாக இறைவனிடமிருந்து அறிவிப்பு பெற்று எனது மஸீஹ் தோன்றும்போது பள்ளிவாசல்களின் நிலை இப்படித்தான் இருக்கும் என தெளிவாக கூறிவிட்டார்கள். நபிமொழியில் இதுபற்றி இவ்வாறு வருகின்றது.

மக்களில் ஒரு காலம் வரும். அப்போது இஸ்லாத்தின் பெயர் மட்டுமே எஞ்சியிருக்கும். திருக்குர்ஆனின் எழுத்துக்களைத் தவிர வேறு எதுவும் அதில் எஞ்சியிருக்காது. அந்தக் காலத்திலுள்ள மக்களின் பள்ளிவாசல்கள் வெளிப்படையாகப் பார்க்கும்போது மக்கள் கூட்டத்தால் நிரம்பி காணப்படும். ஆனால், நேர்வழியிலிருந்தும் அவை காலியாக இருக்கும். அவர்களது உலமாக்கள் வானத்தின்கீழ் வாழும் படைப்பினங்களில் மிகவும் கீழ்த்தரமான படைப்பினமாக இருப்பார்கள். அவர்களிடமிருந்தே குழப்பங்கள் தோன்றும். பிறகு அவை அவர்களையே திரும்பச் சென்றடையும்.

அதாவது, உலமாக்கள் எல்லா தீமைகளின் உறைவிடமாக இருப்பார்கள்.

இவ்வகையில் இன்று அஹ்மதிகளாகிய நாம் நற்பாக்கியம் பெற்றவர்களாக இருக்கின்றோம். நமக்கு காலத்தின் இமாமை ஏற்றுக் கொள்வதற்கான நற்பாக்கியம் கிடைத்துள்ளது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் பைஅத் செய்துள்ள நாம் எப்போதும் நமது நிலைமைகளை ஆய்வு செய்து பார்ப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். அல்லாஹ்வுக்குரிய உரிமைகளை செலுத்துவதுடன் படைப்பினங்களுக்குரிய உரிமைகளையும் செலுத்துபவர்களாக நாம் இருக்க வேண்டும். காலத்தின் இமாமுடன் உண்மையான தொடர்பை நிலைநிறுத்துபவர்களாக நாம் இருக்க வேண்டும். அழகான பள்ளிவாசல் கட்டுவது மட்டும் போதுமானதல்ல. அந்த பள்ளிவாசலிலுள்ள அலங்காரப் பொருள்கள் நமக்கு எந்தப் பயனையும் தரப்போவதில்லை. தொலைவிலிருந்து தெரிய வரும் உயர்வான பள்ளிவாசல் கட்டிடம் நமக்கு எந்தப் பயனையும் தரப்போவதில்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் மிக உயர்ந்த கட்டிடங்களைக் கொண்ட பள்ளிவாசல்கள் கட்டப்படும். ஆனால் அவை நேர்வழியிலிருந்து காலியாக இருக்கும். அந்த பள்ளிவாசல்களுக்கு செல்லும் மக்கள் அல்லாஹ்வுக்குரிய உரிமைகளையும், படைப்பினங்களுக்குரிய உரிமைகளையும் நிறைவேற்றாமல் இருப்பார்கள் என்று முன்னறிவிப்பு செய்துள்ளார்கள். முஸ்லிம்களை உருவாக்குவதற்கு பள்ளிவாசல்களை கட்டுங்கள் என்று கூறிய ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அந்த பள்ளிவாசல்கள் நன்கு அமைக்கப்பட்ட உறுதியான கட்டிடங்களாகத்தான் இருக்க வேண்டும் என்று கூறவில்லை. இறைவன் செயற்கையான செயல்களை விரும்புவதில்லை. மஸ்ஜித் நபவி ஒரு நீண்ட காலம் வரை நன்கு அமைக்கப்படாத மண் சுவர்கள் மற்றும் மரத்தாலான கட்டிடமாகத்தான் இருந்தது. ஆனால் அதன் அடித்தளம் தக்வாவுடன் நிலைநாட்டப்பட்டது. அதற்கு இறைவனும் சாட்சி கூறியுள்ளான். ஆப்பிரிக்காவில் நமது ஜமாஅத்துகள் நிறுவப்பட்ட பல இடங்களில் நமது பள்ளிவாசல்கள் மிக எளிமையான தோற்றத்திலேயே காணப்படுகின்றன. ஆனால் அல்லாஹ்வின் அருளால் இந்த பள்ளிவாசல்கள்தான் அங்கு வலுவான ஜமாஅத்துகள் நிறுவப்படுவதற்குரிய வழியாக அமைந்துள்ளன. நிலைமைகளுக்கு ஏற்பவும் மக்களது கவனத்தை நம் பக்கம் திருப்புவதற்காகவும் பெரும் பெரும் பள்ளிவாசல்களையும் ஜமாஅத் உருவாக்கியுள்ளது. இந்த பள்ளிவாசலையும் நிச்சயமாக இந்த சிந்தனையுடன்தான் நீங்கள் கட்டியுள்ளீர்கள். இது பல மக்களின் கவனத்தையும் தன் பக்கம் ஈர்க்கக்கூடிய ஒரு பள்ளிவாசலாகத் திகழ ஆரம்பித்து விட்டது. மேலும் தொடர்ந்து இது இப்படித்தான் வளர்ச்சியடையும், இன்-ா அல்லாஹ். ஆனால், இந்த பள்ளிவாசலைக் கட்டிய பிறகு இன்னொரு முக்கியப் பணியை நிறைவேற்றும் பொறுப்பு நமக்கு இருக்கின்றது என்பதை ஒருபோதும் மறந்து விட வேண்டாம். அது இந்த பள்ளிவாசலை (தொழுகையாளிகளால்) நிரப்புவதாகும். இந்த பள்ளிவாசல் எப்படிப்பட்ட தூய மக்களால் நிரப்பப்பட வேண்டுமென்றால் அவர்களது உள்ளங்கள் தக்வாவினால் நிறைந்திருக்க வேண்டும். இந்த அச்சத்தின் காரணமாக இறைவனுக்கு முன்னால் குனிபவர்களாகவும் அவனை வணங்குபவர்களாகவும் அவர்கள் இருக்க வேண்டும். இறைவனை வணங்குவதுடன் படைப்பினங்களுக்குரிய உரிமையை நிறைவேற்றுபவர் களாகவும் ஜமாஅத் அமைப்பிற்கு கட்டுப்பட்டு நடப்பவர்களாகவும் அவர்கள் இருக்க வேண்டும். ஏனென்றால், எந்த பள்ளிவாசல்களின் அடித்தளத்தை ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களும் ஹஸ்ரத் இஸ்மாயீல் (அலை) அவர்களும் அல்லாஹ்விடம் துஆ செய்தவாறு எழுப்பினார்களோ அந்த அல்லாஹ்வின் வீட்டின் முன்மாதிரியைப் பின்பற்றியவாறே நமது பள்ளிவாசல்களின் அடித்தளமும அமைய வேண்டும். மேலும் எந்த நோக்கங்களைப் பெறுவதற்காக அவர்கள் இருவரும் அந்த அல்லாஹ்வின் வீட்டின் அடித்தளத்தை உயர்த்தினார்களோ அந்த நோக்கங்களை நிறைவேற்றக் கூடியவையாக நமது பள்ளிவாசல்கள் இருக்க வேண்டும். அவை மகத்தான நோக்கங்களாக இருந்தது. எந்த வீடு மக்கள் மீண்டும் மீண்டும் ஒன்றுகூடும் ஒரு இடமாகவும் அமைதியை வழங்கக்கூடிய இடமாகவும் உருவாக்கப்பட்டதோ அதே நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக நீங்களும் பள்ளிவாசல்களைக் கட்ட வேண்டும் என்றே அல்லாஹ் நமக்குக் கட்டளையிட்டுள்ளான். அந்த நோக்கம் ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களின் உயர்வான நோக்கமாக இருந்தது. அந்த நோக்கத்தை நிறைவேற்றும் வகையில் உள்ள பள்ளிவாசல்களை கட்டினால்தான் அந்த பள்ளிவாசல்கள் இறையச்சத்துடன் கட்டப்பட்ட பள்ளிவாசல்களாக கருதப்படும். அல்லாஹ் திருக்குர்ஆனில் இவ்வாறு கூறுகின்றான்.

நாம் (கஅபாவாகிய) அந்த வீட்டை மக்களுக்கு மீண்டும் மீண்டும் ஒன்றுகூடும் இடமாகவும் பாதுகாப்புக்குரிய இடம்) ஆகவும் ஆக்கிய நேரத்தையும் (எண்ணிப் பாருங்கள்.) அடுத்து இப்ராஹீம் நின்ற இடத்தை தொழுகைக்குரிய இடமாக ஆக்கிக் கொள்ளுங்கள் (என்றும் கட்டளையிட்டோம்). கஅபாவைச் சுற்றி வருபவர்கள், அதில் தங்கியிருந்து வணங்குபவர்கள், குனிந்தும் சிரம் பணிந்தும் வணங்குபவர்கள் ஆகியவர்களுக்காக தூய்மையக வைத்திருங்கள் என்று நாம் இப்ராஹீமுக்கும் இஸ்மாயீலுக்கும் வலியுறுத்திக் கட்டளையிட்டோம். (2:126)

இன்று நாம் பெரும் தியாகம் செய்து கட்டியுள்ள இந்த பள்ளிவாசலை ஒரு அழகிய கட்டிடமாக உருவாக்கி விட்டு இருந்து விடுவது மட்டும் நமது பணியாக இருக்கக் கூடாது. மாறாக, நாம் அடிக்கடி இந்த பள்ளிவாசலுக்கு வரும்போதுதான் இந்த பள்ளிவாசலின் அழகு மேலும் அதிகரிக்கும். அப்போதுதான் ஐவேளை தொழுகைகளை நிறைவேற்றுவதன் பக்கம் நமக்கு கவனம் ஏற்படும். ஐவேளை தொழுகைகளை நிறைவேற்றுவதற்காக நாம் இங்கு வராமலிருந்தால் அடிக்கடி பள்ளிவாசலுக்கு வர வேண்டும் என்ற நோக்கத்தை நிறைவேற்றாதவர்களாக நாம் ஆகி விடுவோம். பிறகு நாம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கட்டளைக்கேற்ப ஒரு தொழுகையிலிருந்து அதற்கு அடுத்த தொழுகை வரை, அவ்வாறே ஒரு ஜுமுஆவிலிருந்து அடுத்த ஜுமுஆ வரை மனிதன் செய்கின்ற பாவங்களிலிருந்து தொழுகை அவனை பாதுகாக்கும் என்ற உத்தரவாதத்திலிருந்து புறக்கணிக்கப் பட்டவர்களாகவும் நாம் ஆகி விடுவோம். எனவே தீமைகளிலிருந்து தப்பிப்பதற்கான உத்திரவாதத்தை பெறவேண்டுமென்றால், தூய்மையான உள்ளத்துடன் மீண்டும் மீண்டும் பள்ளிவாசலுக்கு வரவேண்டியது அவசியமானதாகும். இதுதான் இந்த பள்ளிவாசலின் உண்மையான அழகும் அலங்காரமுமாகும். இந்த பள்ளிவாசல் உங்களது பாதுகாப்பிற்கான உத்திரவாதத்தையும் வழங்கியிருக்கின்றது. இந்த பகுதியின் பாதுகாப்பிற்கான உத்திரவாதமும் இதில் அடங்கியிருக்கின்றது. நல்ல இறைவணக்கமுள்ள அடியாருக்காக அல்லாஹ் மற்றவர்களையும் ஆபத்துகளிலிருந்து பாதுகாக்கின்றான். பள்ளிவாசல்களுக்கு வருபவர்கள் தூய்மையான உள்ளத்துடன் இறைவனை வணங்கும் போது அல்லாஹ்வின் படைப்பினங்களுக்குரிய உரிமைகளை செலுத்துவதன் பக்கமும் அவர்களுக்கு கவனம் ஏற்படும். இது சமுதாயத்தின் அமைதிக்கும் பாதுகாப்பிற்கும் காரணமாக அமையும்.

பிறகு அல்லாஹ் கூறுகின்றான். **வத்தஹிது மின் மகாமி இப்ராஹீம முஸல்லா** – அதாவது எந்த உயர்வான இடத்தில் இப்ராஹீம் (அலை) அவர்கள் நின்றார்களோ நீங்களும் அந்த இடத்தில் நிற்பதற்கு முயற்சி செய்யுங்கள். (2:126)

அந்த உயர்வான தகுதி அவர்களது தக்வாவேயாகும். இப்ராஹீம் (அலை) அவர்கள் தொழுகைக்காக நின்ற இடம் என கற்களில் அடையாளமிடப்பட்டு ஒரு இடம் சொல்லப்படுகின்றது. ஆனால், அவர்கள் நின்ற உயர் தகுதி பெற்ற தக்வாவின் இடம் தான் அசல் இடமாகும். மனிதன் அந்த உயர்வான தகுதியைப் பெறும்போதுதான் இறைவனை உண்மையில் அவன் அடையாளங்கண்டு கொள்கின்றான். பிறகு அந்த மனிதன் இறைவனை வணங்குவதில் முன்னேறிச் செல்வதற்கு அவர் முயற்சி செய்கின்றார். மார்க்கத்திற்காக தியாகங்களைச் செய்ய முயற்சி செய்கின்றார்.

எனவே, ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள் நின்ற இடம் வெளிப்படையான ஒரு இடமல்ல. மாறாக, ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள் இறைவனின் அன்பைப் பெறுவதற்காக தொடராக செய்து வந்த இறைவணக்கங்கள், தியாகங்கள் ஆகியவற்றின் பெயர் தான் அந்த உயர்வான இடமாகும். நாம் இந்த உயர்வான தகுதியைப் பெற முயற்சி செய்தால் ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள் செய்த அந்த துஆக்களின் பக்கமும் நாம் கவனம் செலுத்துவோம். இதன் மூலம் தமது சந்ததிகள் நன்மையில் நிலைநிற்பதற்கான ஏற்பாட்டையும் நாம் செய்கின்றோம். இதன் மூலம் அல்லாஹ்வின் அருட்கொடைகளிலிருந்து நாம் மட்டுமல்லாமல் நமது சந்ததிகளையும் பலன்பெற வைக்கின்றோம். அந்த அருட்கொடைகளை அல்லாஹ் இக்காலத்து இப்ராஹீமிற்கு வழங்கியுள்ளான். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை அல்லாஹ் தனது இல்ஹாம் மூலமாக

இப்ராஹீம் என்று அழைத்துள்ளான். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு **ஸலாமுன் அலா இப்ராஹீம ஸஃபய்னாஹு வ நஜ்ஜய்னாஹு வத்தஹிது மின் மகாமி இப்ராஹீம முஸல்லா குர்ரப்பி ல தஸர்னி ஃபர்தன் வ அன்த கைருல் வாரிசீன்** என இல்ஹாம் வந்துள்ளது. இந்த இல்ஹாமிற்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தந்த பொருள் பின்வருமாறு:

இப்ராஹீம் மீது சாந்தி உண்டாவதாக! (அதாவது இந்த எளியவன் மீது சாந்தி உண்டாவதாக) நாம் அவரிடம் கலப்பற்ற நட்பு வைத்துள்ளோம். ஒவ்வொரு துன்பத்திலிருந்தும் அவருக்கு இரட்சிப்பை வழங்கியுள்ளோம். நீங்கள் உங்களது தொழுகைக்கான இடமாக இப்ராஹீமின் பாதங்களிலிருந்து இடத்தை ஆக்கிக் கொள்ளுங்கள். அதாவது நீங்கள் அவரை முழுமையாக பின்பற்றி நடக்க வேண்டும். அதன் மூலமே உங்களுக்கு இரட்சிப்பு கிடைக்கும். பிறகு இறைவன் என்னிடம் இவ்வாறு கூறினான். என் இறைவா! என்னை தனியாக நீ விட்டு விடாதே! நீயே சிறந்த வாரிசாவாய் என்று நீர் கூறுவீராக.

**தொடர்ந்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:**

இறைவன் என்னை தனியாக விட்டு விடமாட்டான் என்பது இந்த இல்ஹாமில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. ஹஸ்ரத் இப்ராஹீம் (ஸல்) அவர்கள் போன்று அதிகமான சந்ததிகளை எனக்கு வழங்குவான். பலரும் இந்த சந்ததிகள் மூலம் அருள்களை பெறுவார்கள்.

**தொடர்ந்து அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:**

வத்தஹிது மின் மகாமி இப்ராஹீம முஸல்லா என்று இறைவன் என்னிடம் கூறியுள்ளான். இது திருக்குர்ஆனின் வசனமாகும். இந்த வசனத்திலுள்ள மகாம் (உயர் தகுதி) என்பதன் பொருள் நீங்கள் உங்களது இறைவணக்கங்களையும் கொள்கைகளையும் ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களைப் போன்று ஆக்கிக் கொள்ளுங்கள். ஒவ்வொரு வி-யத்திலும் அவரது முன்மாதிரியைப் பின்பற்றிச் செல்லுங்கள்.

**மேலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

அவ்வாறே வத்தஹிது மின் மகாமி இப்ராஹீம முஸல்லா என்ற வசனம் முஹம்மதிய உம்மத்தில் பல்வேறு பிரிவுகள் தோன்றும் போது இறுதி காலத்தில் ஒரு இப்ராஹீம் பிறப்பார். அப்போது அந்த எல்லா பிரிவுகளிலும் எந்தப் பிரிவினர் இந்த இப்ராஹீமை பின்பற்றி நடப்பார்களோ அவர்களே இரட்சிப்பை பெறுவார்கள் என்பதை சுட்டிக் காட்டுகிறது.

எனவே, இதுதான் ஒரு அஹ்மதியின் வாழ்வின் நோக்கமாகும். நீங்கள் முழுமையாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுவதற்கு ஏற்ப அவர்களைப் பின்பற்றி நடப்பதன் மூலம் இரட்சிப்பை பெறுவீர்கள். அவர்களை முழுமையாக எப்படி பின்பற்றி நடக்க முடியும்? கட்டுப்பட்டு நடப்பதில் அழகான முன்மாதிரியை நிலைநாட்டுவதன் மூலமும் தான் செய்த பைஅத் உடன்படிக்கையை எப்போதும் கருத்தில் கொண்டு அதற்கேற்ப செயல்பட்டு பைஅத்தின் நிபந்தனைகளுக்கு ஏற்ப நடப்பதற்கு தன்னால் இயன்றவரை முயற்சி செய்வதன் மூலமே நீங்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை முழுமையாகப் பின்பற்ற முடியும். அதன் மூலமாக ஒரு அஹ்மதி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் ஆன்மீக சந்ததிகளில் இணைய முடியும். நன்மைகளில் நிலைத்து நின்றவாறு அல்லாஹ்வின் அருள்களுக்கு வாரிசான ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களின் சந்ததிகளை போல் அந்தக் காலத்து இப்ராஹீமிற்கு முழுமையாக கீழ்ப்படிந்து நடந்தவாறு நீங்கள் அல்லாஹ்வின் அருள்களுக்கு வாரிசுகளாகி விடுவீர்கள். இறைவன் என்னை தனியாக கைவிட்டு விடமாட்டான் என்பது அவனது வாக்குறுதியாகும் என ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியது போன்றே அல்லாஹ் அவர்களுக்கு தூய்மையாளர்களின் ஜமாஅத்தை வழங்கிக் கொண்டே இருப்பான். ஆனால், பள்ளிவாசலை நிரப்பியவாறு அமைதி மற்றும் பாதுகாப்பின் உயர்வான முன்மாதிரியை நிலைநாட்டி அதன் மூலமாக இறைவனின் அன்பை ஈர்ப்பதுதான் நமது பணியாகும். ஜமாஅத்தின் அமைப்புக்கு கட்டுப்பட்டு நடப்பதன் உரிமையை முழுமையாக

நிறைவேற்றுங்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மூலமாக நமக்கு கிடைக்கவிருக்கின்ற இறைவன் விதித்துள்ள அருட்கொடைகளிலிருந்தும் நாம் ஒருபோதும் புறக்கணிக்கப்பட்டவர்களாக ஆகிவிடக் கூடாது.

அவ்வாறே நமது இறைவணக்கங்களையும் கொள்கைகளையும் ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களின் முன்மாதிரிக்கு ஏற்ப அமைத்துக் கொள்ளும்படி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நமக்கு கட்டளையிட்டுள்ளார்கள். ஒவ்வொரு செயலிலும் ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களின் முன்மாதிரிக்கு ஏற்ப செயல்பட வேண்டும் என்றும் கூறியுள்ளார்கள்.

அவ்வாறு நீங்கள் செயல்பட்டால்தான் இஸ்லாத்திலுள்ள பிரிவுகளில் இரட்சிப்பிற்குரிய பிரிவாக இருக்கின்ற முஹம்மதிய மஸீஹின் ஜமாஅத்தில் இணைந்தவர்களாக நீங்கள் கருதப்படுவீர்கள் அந்த ஜமாஅத்தின் மீது அல்லாஹ் கிலாஃபத்தின் அருட்கொடையையும் வைத்துள்ளான். அந்த ஜமாஅத்திலுள்ள நபர்களுக்கு ஒரே கையின் சைகைக்கு ஏற்ப எழுந்து நிற்கவும் உட்காரவும் தெரியும். தியாகங்கள் செய்வதற்காக அவர்கள் அமைதியிழந்து காணப்படுவார்கள். அவர்கள் கஃபாவின் முன்மாதிரிக்கு ஏற்ப தங்களது பள்ளிவாசல்களை கட்டுவார்கள். அவர்கள் தங்கள் சந்ததிகளை ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களைப் போன்று மார்க்கத்திற்காக தியாகங்கள் செய்வதற்காக அர்ப்பணித்து விடுகின்றார்கள்.

எனவே, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் ஜமாஅத்தில் இணைந்திருக்கும் நாம் நமது தகுதிக்கேற்ப பள்ளிவாசல்களை கட்டிக்கொண்டே செல்ல வேண்டும். அதன் மூலம் உலகிற்கு இஸ்லாத்தின் பக்கம் கவனம் திரும்ப வேண்டும். மேலும் உங்கது சந்ததிகளையும் மார்க்கத்திற்காக அர்ப்பணித்துக் கொண்டே இருக்க வேண்டும். அதன் மூலமாக ஏக இறைவனைப் பற்றி உலகிற்கு தெரிவிக்கின்ற மக்கள் எப்போதும் உலகில் பிறந்து கொண்டே இருக்க வேண்டும். அவர்கள் அந்த ஏக இறைவனின் தூதுச் செய்தியை உலகில் பரப்புபவர்களாக இருக்க வேண்டும்.

இங்கு நான் ஒரு வி–யம் தொடர்பாக குறிப்பாக கவனமூட்ட விரும்புகின்றேன். இந்த காலத்தின் இமாம் எந்தக் கொள்கையில் நாம் நிலைநிற்க வேண்டும் என்று விரும்புகின்றார்களோ அதில் நாம் உறுதியாக நிலைநிற்க வேண்டும். இந்தக் காலத்தில் நமக்கு தீர்ப்பளிக்கக் கூடியவராக வந்துள்ளவர் கூறியுள்ள வழிமுறைக்கு ஏற்பவே நாம் செயல்பட வேண்டும். உங்களது மனதின் சொந்த விருப்பங்களைப் பின்பற்றியவாறு உலக நோக்கங்களுக்காக உங்களது கொள்கையை நீங்கள் விற்றுவிடக் கூடாது. கொள்கை என்றால் என்ன? உள்ளத்தில் ஏற்படும் நிச்சய உறுதியின் நிலைதான் அது. அதற்கு எதிரில் ஒவ்வொரு உலகப் பொருளும் அற்பமாக உங்களுக்கு தென்பட வேண்டும். இதற்கு எதிரில் எந்தவொரு பொருளுக்கும் எத்தகைய முக்கியத்துமும் இல்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்புக்கு ஏற்ப வரவேண்டிய மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் (அலை) அவர்களேயாவார்கள் என்பதை ஒவ்வொரு அஹ்மதியின் கொள்கையாகும். அதில் ஒவ்வொரு அஹ்மதிக்கும் முழுமையான ஈமான் இருக்கின்றது. அவர்களது பைஅத்தில் நுழைந்த பிறகு அவர்களது ஒவ்வொரு கட்டளையையும் ஏற்று அதை செயல்படுத்துவது நமக்கு மிகவும் அவசியமானதாகும். ஆனால் சில நேரங்களில் தங்களது சுய விருப்பத்தின் காரணமாக சிலர் எப்படிப்பட்ட செயல்களைச் செய்து விடுகின்றனர் என்றால் அதன் மூலமாக அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மீது வைத்துள்ள ஈமானையும், ஆழ்ந்த பற்றையும் அது களங்கப்படுத்தி விடுகின்றது.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

எவர்கள் தங்களது கொள்கையில் பலவீனத்தை வெளிப்படுத்துகின்றார்களே அவர்கள் அநீதியிழைப்பவர்களாக இருக்கின்றார்கள்.

அவர்கள் அறிந்தோ அறியாமலோ செய்கின்ற செயல்களின் கடுமையான தீய தாக்கத்தை உணராத நிலையில் இவர்கள் இருக்கின்றார்கள். அவை பைஅத்திலிருந்து அவர்களை திசைதிருப்பக் கூடியதாக இருக்கின்றது. அதற்கு ஓர் உதாரணத்தை நான் உங்கள் முன்னால் வைக்கின்றேன்.

இப்போது இந்த பலவீனம் அதிகமாக தென்பட ஆரம்பித்திருக்கின்றது. இது எனது பார்வையில கொள்கை ரீதியாக நாம் இழைக்கினற மிகத் தெளிவாகத் தெரியும் ஒரு தவறாகும். இது திருமண உறவு தொடர்பான வி-யமாகும்.

திருமணம் செய்வது ஒரு சிறந்த செயலாகும். இதன் பக்கம் அல்லாஹ் நமக்கு கவனமூட்டியுளளான். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் இது தொடர்பாக நமக்கு கவனமூட்டியுள்ளார்கள். இன்னும் சொல்வதென்றால் இறைவன் விதவைகளுக்கு அவர்கள் மறுமணம் செய்து கொள்ள வேண்டும் என்று கட்டளையிட்டுள்ளான். அவ்வி-யத்தில் அந்த விதவையின் உறவினர்கள் எவ்வகையிலும் தடையாக இருக்கக் கூடாது என்றும் இறைவன் கூறியுள்ளான். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும், தங்களது சஹாபாக்களுக்கு திருமணம் செய்வதன் பக்கம் ஆர்வமூட்டிக் கொண்டே இருந்தார்கள். பல திருமண உறவுகளைப் பற்றியும் அவர்கள் ஆலோசனை வழங்கி வந்தார்கள். ஆனால், இந்த அழகிய செயல் சில நேரங்களில் சில அஹ்மதி குடும்பங்களுக்கு சோதனையாக ஆகி விடுகின்றது. இதில் ஜமாஅத் அமைப்பானது எந்தக் குற்றத்தையும் இழைக்கவில்லை. ஆனால் சிலர் இவ்வி-யத்தில் ஜமாஅத் அமைப்பின் மீது குற்றஞ்சாட்டுபவர்களாக இருக்கின்றார்கள். ஒரு நபர் தனது விருப்பத்திற்கேற்ப ஜமாஅத்தைச் சாராத ஒரு பெண்ணை திருமணம் செய்யும்போதுதான் இப்படிப்பட்ட குற்றச்சாட்டுகள் வைக்கப்படுகிறது. ஜமாஅத்தின் அமைப்பு இதனை ஒரு தீமையாகக் கருதும். அதனால் எனக்கு இதற்கான அனுமதி கிடைக்காது என்ற அச்சத்தில் அல்லது சில நேரங்களில் ஜமாஅத்தைச் சாராத பெண் வீட்டார் தரப்பிலிருந்தும் ஜமாஅத்தைச் சாராத மவ்லவி அல்லது ஒரு நபர்தான் நிக்காஹ்வை நடத்தி வைப்பார் என்ற நிபந்தனை வைக்கப்படுவதால் இப்படிப்பட்ட அஹ்மதி அல்லாதவர்கள் மூலமாக தங்களது நிக்காஹ்வை நடத்துகின்றார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது பைஅத்திலிருந்து அவர்களை வெளியேற்றுகின்ற ஒரு பெரும் தவறை அவர்கள் செய்கின்றார்கள். ஏனென்றால், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களைப் பொய்யர் என்று கூறும் ஒருவர்தான் இவர்களது நிக்காஹ்வை நடத்துகின்றார். அவர்களைக் காஃபிர் என்று கூறும் ஒருவர்தான் அந்த நிக்காஹ்வை நடத்துகின்றார். இப்படிப்பட்ட அஹ்மதி மணமகன் அல்லது அவரது திருமணத்தில் அவருக்கு உதவியாக இருக்கின்ற அவரது குடும்பத்தைச் சார்ந்தவர்கள் தங்களது இந்த செயல் மூலமாக நாங்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் பைஅத்திலிருந்து வெளியேறி இந்த மவ்லவி மூலமாக நிக்காஹ் நடத்தியதன் மூலம் அவர்களை பொய்ப்படுத்தி மறுக்கின்றோம் நவூதுபில்லாஹ் (அல்லாஹ் காப்பானாக) என்ற அறிவிப்பை தான் செய்கின்றார்கள். இப்படிப்பட்ட நபர்கள் கொள்கை ரீதியாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தம்மை குறித்து மஹ்தி என்றும் மஸீஹ் என்றும் செய்துள்ள வாதத்தை மறுக்கக் கூடியவர்களாக இருக்கின்றார்கள். ஏனென்றால், அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை பொய்யர் என்றும் காஃபிர் என்றும் கூறும் மவ்லவியை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு எதிராக நிறுத்தியுள்ளார்கள். இந்த செயலின் காரணமாக ஜமாஅத்தை விட்டு இப்படிப்பட்ட நபர்களை நாம் வெளியேற்றும்போது எங்கள் மீது அநீதியிழைக்கப்பட்டிருக்கின்றது என்று இவர்கள் கூறுகின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சுன்னத்தை பின்பற்றியவாறே இந்த நிக்காஹ் நடத்தப்பட்டுள்ளது என்றும் இவர்கள் கூறுகின்றார்கள். ஒருவரது தந்தையைப் பற்றி எவராவது இழிவாகப் பேசினால் அவரை எதிர்த்து நின்று அதற்காக தங்களது உயிரை துறப்பதற்குக்கூட பல மக்களும் தயாராகி விடுவதை நாம் பார்க்கின்றோம். ஆனால், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்காக தன்மான உணர்வை வெளிப்படுத்த வேண்டிய சந்தர்ப்பங்கள் வருகின்ற போது இவர்களது தன்மான உணர்வு இவர்கள் சொந்த மன விருப்பங்களுக்கு இரையாகி விடுகின்றது. இப்படிப்பட்டவர்கள் சில கட்டாய சூழ்நிலை காரணமாக அனுமதி பெற்று ஒரு அஹ்மதி மூலமாக நிக்காஹ்வை நடத்தினால் அதன் மூலம் தங்களது ஈமானைப் பாதுகாத்துக் கொள்வதுடன் இத்தகைய சோதனையிலிருந்தும் அவர்கள் தப்பித்துக் கொள்பவர்களாகவும் இருப்பார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள்ள அழகிய வழிமுறைக்கு ஏற்ப தங்களது மன இச்சைகளுக்கும் சுய விருப்பங்களுக்கும் இரையாவதற்குப் பதிலாக

இப்படிப்பட்டவர்கள் நல்ல மார்க்கப் பற்றுள்ள பெண்ணைத் தேடினால் அவர்களை பெண்களை திருமணம் செய்து கொள்வதன் மூலம் சோதனைகளிலிருந்து தப்பித்துக் கொள்வதுடன் மட்டுமல்லாமல் தங்களது குடும்பத்தையும் சோதனையிலிருந்து காப்பாற்றுபவர்களாகவும் இவர்கள் ஆகி விடுகின்றார்கள். மேலும் இதற்கான நற்கூலியைப் பெறுபவர்களாகவும் இவர்கள் இருப்பார்கள். இவ்வாறே சில குமரிப் பெண்களுக்கு அவர்களின் தாய் தந்தையர் அவர்களுக்கு முழுமையான சுதந்திரம் வழங்கியிருப்பதன் காரணமாக அல்லது வேறு காரணங்களுக்காக அஹ்மதியல்லாதவர்களை திருமணம் செய்து கொள்கின்றார்கள். அத்தகைய பெண்கள் தங்களை மட்டுமல்லாமல் தங்களது சந்ததிகளையும் அவர்கள் விரும்பாத நிலையிலும் மற்றவர்களின் கையில் ஒப்படைத்த நிலையில் ஜமாஅத்தை விட்டு வெளியேறி விடுகின்றார்கள். அவர்கள் விரும்பாத நிலையிலும் என்று நான் கூறுவதற்கு காரணம் சில அஹ்மதி பெண்கள் அஹ்மதிய்யத்துடன் தங்களுக்குள்ள தொடர்பை முறித்துக் கொள்ள விரும்பமாட்டார்கள். ஆனால் திருமணத்திற்குப் பிறகு எப்படிப்பட்ட நிலைமைகள் அவர்களுக்கு ஏற்படுகின்றதென்றால் அவர்களுக்கு வேறு வழியில்லாமல் ஆகி விடுகின்றது. அவர்களது சந்ததிகள் அஹ்மதிகளல்லாத மற்றவர்களின் மடியில் அமரும்போது அவர்களால் வேறு எதுவும் செய்ய முடிவதில்லை. இப்படிப்பட்ட பலவீனம் வளர்ந்து வருவதால் இதைப் பற்றிக் கூற வேண்டும் என்று நான் கருதினேன்.

எனவே, உலகத்தை விட மார்க்கத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பேன் என்று உடன்படிக்கையை நிறைவேற்றுவதன் பக்கம் ஒவ்வொரு அஹ்மதியும் கவனம் செலுத்த வேண்டும். மார்க்க வி-யங்களில் தீய தாக்கத்தை ஏற்படுத்தும் இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் எல்லா விதமான உலக விருப்பங்களுக்கும் ஒரு அஹ்மதி முன்னுரிமை வழங்காமல் அவற்றிற்கு தடையை ஏற்படுத்திக் கொண்டவாறு தனது உடன்படிக்கையை நிறைவேற்ற வேண்டும். இதனை ஒவ்வொரு அஹ்மதியும் புரிந்து செயல்பட்டால் நிச்சயமாக அவர்களுக்கு இறைவனின் அன்புப் பார்வை கிடைக்கும். அவர்கள் இந்த காலத்து இப்ராஹீமுடன் உண்மையான தொடர்பை ஏற்படுத்திக் கொண்டவர்களாக ஆகி விடுவார்கள். அவரை உண்மையாகப் பின்பற்றி அவருக்கு கட்டுப்பட்டு நடப்பவர்களாக அவர்கள் ஆகி விடுவார்கள்.

இவ்வாறு அஹ்மதியல்லாதவர்களை திருமணம் செய்கின்றவர்களுக்கு அல்லது அஹ்மதியல்லாதவர்கள் மூலம் தங்களது நிக்காஹ்வை நடத்துபவர்களுக்கு தண்டனை வழங்குவது தொடர்பான பிரச்சனைகள் என் முன்னால் கொண்டு வரப்படும்போது அடிப்படையன வழிமுறைக்கு ஏற்ப அவர்களுக்கு தண்டனை வழங்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது. ஆனால் எவருக்கு நான் தண்டனை வழங்கினாலும் அது எனக்கு மிகவும் துக்கத்தை தரக்கூடியதாகவே இருக்கின்றது.

பிறகு அமைதியை நிலைநாட்டுவதும் பள்ளிவாசல்களுடன் தொடர்புடைய ஒரு வி-யமாக இருக்கின்றது. தூய்மையான உள்ளத்துடன் இறைவனை வணங்க வேண்டும் என்ற எண்ணத்தில் மட்டும் பள்ளிவாசல்களுக்கு வருபவர்கள் அல்லாஹ்வின் படைப்பினங்களுக்குள்ள உரிமையையும் முழுமையாக நிறைவேற்றக் கூடியவர்களாக இருப்பார்கள். ஆனால், எவர்கள் பள்ளிவாசல்களுக்கு வந்த பிறகும் இறைவனின் அடியார்களுக்குரிய உரிமைகளை நிறைவேற்றாமல் இருக்கின்றார்களோ அவர்கள் செயலளவில் தங்களை உண்மையான கட்டுப்படுகின்ற நிலையிலிருந்தும் வெளியேற்றுபவர்களாக இருக்கின்றார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் தமது நூல்களிலும் மல்ஃபூஸாத்திலும் மற்றவர்களது உரிமையை நிறைவேற்றுவதன் பக்கம் எந்த அளவு கவனமூட்டியுள்ளார்கள் என்றால் அவர்களை உண்மையாகப் பின்பற்றுகின்ற ஒருவர் அவர்கள் கூறும் வி-யங்களிலிருந்தும் தமது பார்வையை திருப்பிக் கொள்வார் என்பது சாத்தியமேயில்லை. ஆனால், சில அஹ்மதிகள் இத்தகைய அழகிய போதனைகளிலிருந்தும் வெகு தொலைவில் விலகிச் சென்று கொண்டிருப்பது வேதனைக்குரியதாகும். ஒருவர் மற்றவர் மீது குற்றங்களை சுமத்துவது, சண்டை போடுவது, குறிப்பாக கணவனுக்கும் மனைவிக்கும் இடையில் சண்டைகள் ஏற்படும் போது இரு குடும்பங்களைச் சார்ந்த எல்லாரும் அந்த சண்டைகளில் பங்கு பெறுவது, பிறகு பெண்கள் மீது அபாண்டமான அசுத்தமான பழிகளை சுமத்தி அப்பெண்களுக்கு அவப்பெயரை ஏற்படுத்த முயற்சிகளை செய்து கொண்டிருக்கும் நிலையில் நாங்கள் அஹ்மதிகள் என்ற இவர்களது வாதத்தால் என்ன பயன் ஏற்படும்?

எனவே, இப்படிப்பட்டவர்கள் கொஞ்சமாவது தங்களைப் பற்றி ஆய்வு செய்து பார்க்க வேண்டும். சிறிதளவாவது இறைவனுக்கு அஞ்ச வேண்டும். சில பொறுப்பாளர்களும் நீதியின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றாமல் தவறு செய்கின்ற மக்களுக்கு சாதகமாக செயல்படுகின்றார்கள் என்று எனக்கு முறையீடுகள் வந்துள்ளன. அவர்களிடம் நான் கூறிக்கொள்வது என்னவென்றால் நீங்கள் நீதியின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுங்கள். எந்த ஏகத்துவத்தையும் அமைதியையும் நிலைநாட்ட ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அனுப்பப்பட்டுள்ளார்களோ அவற்றை நிலைநாட்ட முயற்சி செய்யுங்கள். அவ்வாறு இல்லையென்றால் உடன்படிக்கையை நிறைவேற்றாமல் இருந்தவர்களையும் நம்பி ஒப்படைக்கப்பட்ட அமானத்திற்குரிய உரிமையை செலுத்தாதவர்களாகவும் நம்பிக்கை துரோகம் செய்தவர்களாகவும் நீங்கள் ஆகி விடுவீர்கள். இப்படிப்பட்டவர்கள் ஜமாஅத்தின் அமைப்பின் பிடியிலிருந்து தப்பித்துக் கொண்டாலும் அல்லாஹ்வின் முன்னிலையில் பதில்கூற வேண்டியவர்களாக இருக்கின்றார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் ஜமாஅத்தில் இணைந்து அந்த ஜமாஅத்திற்குரிய உரிமையை செலுத்துவதற்கான நற்பாக்கியத்தை அல்லாஹ் ஒவ்வொரு அஹ்மதிக்கும் வழங்குவானாக. அல்லாஹ்வும் அவனது தூதரும் நமக்கிட்ட கட்டளைக்கு ஏற்ப பள்ளிவாசல்களைக் கட்டி அவற்றில் இறைவனை வணங்குவதற்குரிய உரிமையை சரியாக நிறைவேற்றுபவர்களாக அவன் நம்மை ஆக்குவானாக. ஒருவருக்கொருவர் அன்பான பரிமாற்றத்துடன் நடந்து அமைதி மற்றும் பாதுகாப்பின் தூதுச் செய்தியை வழங்குபவர்களாகவும் அல்லாஹ் நம்மை ஆக்குவானாக. பள்ளிவாசல் நம்மிடம் இறைவனை வணங்குவதில் நமக்கு ஆர்வத்தை ஏற்படுத்துவதுடன் நம் அனைவரையும் ஒற்றுமையின் சரட்டில் கோர்ப்பதற்கும் அது காரணமாக அமையட்டும். நம்மில் ஒவ்வொருவரும் எப்போதும் உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்கி தங்களது சுய விருப்பங்களை மார்க்கத்திற்காக தியாகம் செய்யக் கூடியவர்களாக அல்லாஹ் நம்மை ஆக்குவானாக. இந்தப் பள்ளிவாசலைப் பற்றிய அறிமுகம் நாளுக்கு நாள் மக்கள் மத்தியில் பரவும் சமயத்தில் நாம் நமது சொல்லால் மட்டுமல்லாமல் நமது செயலாலும் இந்த உண்மையான தூதுச் செய்தியை மக்களுக்கு எட்டவைக்கக்கூடியவர்களாக அல்லாஹ் நம்மை ஆக்குவானாக. இஸ்லாத்திற்கு எதிராக நிலவும் தப்பெண்ணங்களை அகற்றுவதற்கும் இதுவே சிறந்த வழிமுறையாகும். ஒவ்வொருவரது செயலும் மற்றவர்கள்மீது எந்த அளவு தாக்கத்தை ஏற்படுத்துமோ அந்த அளவு ஆதாரங்களும் வாதப்பிரதிவாதங்களும் தாக்கத்தை ஏற்படுத்தாது. உங்களது நன்மைகள் இங்குள்ள பெரும்பாலான மக்களால் உணரப்பட்டு வருகிறது. அதை நீங்கள் தொடர்ந்து நிலைநாட்ட வேண்டும். பிறகு இதுதான் ஜமாஅத் பரவ வேண்டும் என்ற நோக்கத்தை நிறைவேற்றக்கூடியதாக இருக்கும். அல்லாஹ் எல்லாருக்கும் இதற்கான நற்பாக்கியத்தை வழங்குவானாக.

★ ★ ★ ★ ★

**JUMUA KUTHBA**
**HADHRAT KHALIFATUL MASIH V**
**AT BAITUN NOOR, CANADA**
**ON 04.07.2008**

Translated by : **Maulavi M. Rafeeq Ahmad H.A**
Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**